## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.41/2018

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வனிதா | மதம் | : இந்து |
| க/பெ | : துரை | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : கிருஷ்ணசமுத்திரம் |
| தொழில் | : சத்துணவு ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**03.02.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. வழக்கு சொத்தின் புதிய புல எண்.413/15 என்றால் சரிதான். பழைய புல எண் என்ன தெரியுமா என்றால் புல எண்.251 ஆகும். புல எண்.251 அந்த கிராம முழுமைக்குமான புல எண் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் 251தான். அந்த கிராமம் முழுமைக்குமான உட்பிரிவு 251/1 என்றால் தவறு 251 தான். தாவா சொத்து காலியிடம் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் மாணிக்க ரெட்டியின் மனைவி கண்ணம்மாளின் பூர்வீக சொத்து என்றால் இல்லை. அந்த இடத்தில் கண்ணம்மாள் குடிசை வீடுகட்டி குடியிருந்தார் என்றால் ஆமாம். கண்ணம்மாள் தற்போது எங்கு உள்ளார் என்றால் அவர் இறந்துவிட்டார். கண்ணம்மாளின் பிள்ளைகள் பெயர் தெரியுமா என்றால் பட்டாபி, சேகர் ஆகும். 20.10.1993ல் கண்ணம்மாளும் அவரது பிள்ளைகளும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் 251/1 என்று ஒரு பொய் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார்கள். நான் சொல்வதுபோல் அது பொய் ஆவணம் இல்லை என்றாலும் அது உண்மையான ஆவணம் என்றாலும் சரியல்ல.

4. அந்த இடத்தில் வாதி சின்னராஜன் கழிவறை கட்டியுள்ளார் என்றால் ஆமாம். வழக்கு சொத்திற்கு எத்தனை சொத்துக்களில் குடியுள்ளோம் என்றால் வழக்கு சொத்து எங்களுடையதுதான். அதற்கு அருகில் உள்ள வீடு எங்களுடையதுதான்.

அதற்கு அடுத்த சொத்தும் எங்களுடையதுதான். தாவா சொத்திற்கு அருகில் சீனிவாசன் வீடு உள்ளது. அதற்கு அடுத்து நாங்கள் குடியிருக்கும் வீடு உள்ளது. நானும் என் கணவரும் 25.04.2018ல் அத்துமீறி நுழைய முயற்சித்தோம் என்றாலும் இது தொடர்பாக 07.08.2018ல் வாதி எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். அது எங்கள் சொத்து என படித்து பார்த்துவிட்டு அங்கு முள்ளை வெட்டி உள் நுழைந்தோம். நான் அந்த சமயம் சீனிவாசன் வழக்கறிஞரை வைத்து பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம்.

5. நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் அதனால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும் வாதி வழக்கு தாக்கல் செய்தார். பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் உள்ள புல எண்.413/7 என்பது நாங்கள் குடியிருக்கும் வீடு என்றால் ஆமாம். புல எண்.413/7ல் என்ன கட்டியுள்ளோம் என்றால் மாடி வீடு கட்டியுள்ளோம். மாடி வீடு கட்டி என் மகன் குடியுள்ளார் என்றால் ஆமாம். அந்த மாடி வீடு தாவா சொத்தில் இருந்து எத்தனையாவது வீடு என்றால் 3வது வீடு ஆகும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 என் மகனுக்கு சொந்தமானது என்றாலும் வழக்கு சொத்திற்கு சம்மந்தமற்றது என்றாலும் ஆமாம். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் புல எண்.251/1 என்றுதான் உள்ளது என்றாலும் புல எண். 251 என இல்லை என்றாலும் புல எண்.251தான். நான் வழக்கு சொத்தின் மதிப்பை 2025ம் ஆண்டுக்கானதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எனவே நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 3 வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் வாதி வழக்கு தாக்கல் செய்த காலத்திற்கான சொத்து மதிப்பு சான்று தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி வழக்கு பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)